பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**05 11 2025 WEDNESDAY 7.15 PM**

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

1. லட்சாதிபதி மகளிர் திட்டம், மகளிரின் சுயசார்பு, அதிகாரமளித்தலுக்கான சான்றாக திகழ்கிறது என்று குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

2. பீகார் சட்டப்பேரவைக்கு நாளை நடைபெறவுள்ள முதல்கட்ட வாக்குப்பதிவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

3. தேர்தல் முடிவுகள் காங்கிரஸுக்கு ஆதரவாக வராதபோது தேர்தல் ஆணையத்தையும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களையும் திரு ராகுல்காந்தி குறை கூறுவதாக, மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு குற்றம் சாட்டியுள்ளார்.

4. இந்தியா — போர்ச்சுகல் இடையேயான இருதரப்பு உறவுகள் குறித்து இன்று **Lisbon**-ல் விவாதிக்கப்பட்டது.

5. சீன தைபே-யில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Kaliyanda Poonacha** — தாய்லாந்தின் **Pruchya Isaro** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

லட்சாதிபதி மகளிர் திட்டம், மகளிரின் சுயசார்பு, அதிகாரமளித்தல் மற்றும் சிறப்பிற்கான சான்றாக திகழ்கிறது என்று குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சட்டீஸ்கர் மாநிலம் **Rajnandgaon**-ல் நடைபெற்ற லட்சாதிபதி மகளிர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், சவால்களை வாய்ப்புகளாக மாற்றும் நாட்டின் வலிமை மிக்க உறுதியான பெண்களின் அடையாளமாக இத்திட்டம் திகழ்கிறது என்று கூறினார்.

இது வருவாய் நிலைகளை பிரதிபலிப்பது மட்டுமின்றி, மகளிரின் சுதந்திரம், கண்ணியம் மற்றும் தன்னம்பிக்கையை வெளிப்படுத்துவதாக திரு சி பி ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

<<<<<>>>>>

பீகார் சட்டப்பேரவைக்கு நாளை நடைபெறவுள்ள முதல்கட்ட வாக்குப்பதிவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

**121** தொகுதிகளில் இதற்கான வாக்குப்பதிவு காலை **7** மணிக்கு தொடங்கி, மாலை **6** மணிவரை நடைபெறவுள்ளது.

இந்த முதல்கட்ட தேர்தலில், மொத்தம் ஆயிரத்து **314** வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

3 கோடியே 75 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

வைஷாலி மாவட்டத்தில் உள்ள எட்டு சட்டப்பேரவைத் தொகுதிகளில் 105 வேட்பாளர்கள் களத்தில் உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ரகோபூர், வைஷாலி, ஹாஜிப்பூர், மஹுவா, மஹ்னார் ஆகிய தொகுதிகள் வைஷாலி மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

இதில் ரகோபூர் தொகுதியில் ஒருங்கிணைந்த எதிர்கட்சி கூட்டணி சார்பாக ராஷ்ட்ரிய ஜனதாதள தலைவர் திரு தேஜஸ்வி பிரசாத் யாதவ் தொடர்ந்து மூன்றாவது முறையாக போட்டியிடுகிறார்.

தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில், பிஜேபி வேட்பாளர் திரு சதீஷ்குமார் இத்தொகுதியில் நிறுத்தப்பட்டுள்ளார்.

இதற்கிடையே, முங்கர் மாவட்டத்தில் வாக்குப்பதிவுக்கான விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மாநில காவல்துறையினர், மத்திய துணை ராணுவப்படையினர் ஆகியோர் பாதுகாப்புப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறுகிறார்.

முங்கர் மாவட்டத்தில் இடம்பெற்றுள்ள ஜமல்பூர், தாராபூர் மற்றும் முங்கர் சட்டப்பேரவைத் தொகுதிகளில் சுமார் 10 லட்சம் பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

தேர்தலை சுமூகமாக நடத்துவதை உறுதி செய்யும் வகையில், 348 பார்வையாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மாவட்ட அளவில் கட்டுப்பாட்டு அறைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில், இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் தொகுதிகளில் பிரச்சாரம் முழுவீச்சில் நடைபெற்றுவருகிறது.

தேசிய ஜனநாயக கூட்டணி மற்றும் ஒருங்கிணைந்த எதிர்கட்சி கூட்டணியை சேர்ந்த தலைவர்கள் சிமஞ்சல், சம்பரன், மகத் உள்ளிட்ட பகுதிகளில் இன்று பிரச்சாரம் மேற்கொண்டனர்.

கிழக்கு சம்பரன் மற்றும் மேற்கு சம்பரன் மாவட்டத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா, தேசிய ஜனநாயக கூட்டணி சிறந்த நிர்வாகத்தை அளிப்பதாக தெரிவித்தார்.

நெடுஞ்சாலைகள், இணைய வசதி, ரயில்வே, விமான நிலையங்கள் ஆகியவை பீகார் வளர்ச்சிக்கான சான்றுகள் என்று அவர் கூறினார்.

காங்கிரஸ் கட்சியை சேர்ந்த திருமதி பிரியங்கா காந்தி, வால்மிகி நகர் மற்றும் சந்த் பாட்டியா தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

ராஷ்ட்ரிய ஜனதாதள தலைவர் திரு தேஜஸ்வி பிரசாத் யாதவ், பல்வேறு இடங்களில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

சமாஜ்வாதி கட்சித் தலைவர் திரு அகிலேஷ் யாதவ், நவாதா மற்றும் அர்வால் தொகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

வாக்காளர் பட்டியலில் பிஜேபி-யும், தேர்தல் ஆணையமும் முறைகேடு செய்வதாக காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான திரு ராகுல்காந்தி குற்றம் சாட்டியுள்ளதற்கு பிஜேபி மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு கிரண் ரிஜிஜு குறை கூறியுள்ளார்.

புதுதில்லியில் இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேர்தல் முடிவுகள் காங்கிரஸுக்கு ஆதரவாக வராதபோது தேர்தல் ஆணையத்தையும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களையும் திரு ராகுல்காந்தி குறை கூறுவதாக தெரிவித்தார்.

வாக்காளர் பட்டியலில் ஏதேனும் தவறு இருந்தால், தேர்தல் ஆணையத்திடம் காங்கிரஸ் புகார் அளிக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

முன்னதாக, ஹரியானா சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்காளர் பட்டியலில் முறைகேடு நடைபெற்றதாக திரு ராகுல்காந்தி இன்று குற்றம் சாட்டியிருந்த நிலையில், திரு கிரண் ரிஜிஜூ இவ்வாறு கூறியுள்ளார்.

<<<<<>>>>>

மேற்குவங்க மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணிகளை மேற்கொள்வது குறித்து ஆய்வு செய்வதற்காக துணை தேர்தல் ஆணையர் திரு கியானேஷ் பாரதி தலைமையிலான தேர்தல் ஆணையக்குழு அம்மாநிலத்திற்கு சென்றுள்ளது.

இக்குழு, அலிப்பூர்துவார், குச்பிஹார், ஜல்பைகுரி, டார்ஜிலிங் மாவட்டங்களுக்கு சென்று, அங்குள்ள அதிகாரிகளுடன் விவாதிக்க உள்ளது.

மேற்குவங்க தலைமை தேர்தல் அதிகாரி திரு மனோஜ் அகர்வால் உள்ளிட்ட அதிகாரிகளும் இக்குழுவுடன் சென்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

இந்தியா — போர்ச்சுக்கல் இடையே பொருளாதார ஒத்துழைப்பு, கலாச்சார உறவுகள், மக்களிடையேயான தொடர்பு உள்ளிட்ட இருதரப்பு உறவுகள் குறித்து இன்று விவாதிக்கப்பட்டது.

**Lisbon**-ல் நடைபெற்ற இதற்கான கூட்டத்தில், இந்திய - போர்ச்சுக்கள் வெளியுறவு அதிகாரிகள் பங்கேற்றனர்.

அப்போது பாதுகாப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, வேளாண்மை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், சுற்றுலா மற்றும் கல்வி உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு உறவுகள் குறித்து விவாதிக்கப்பட்டதாக வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

ஒப்பந்தங்கள் குறித்த பேச்சுக்கள் தொடர்பான தற்போதைய சூழல் குறித்தும் விவாதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா — ஐரோப்பிய யூனியன் உறவுகள் குறித்தும், பிராந்திய மற்றும் உலகளாவிய விவகாரங்கள் குறித்தும் இந்தியா — போர்ச்சுக்கள் இடையே கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

ருமேனியா சென்றுள்ள மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை இணையமைச்சர் திரு ஜிதின் பிரசாதா தலைமையிலான இந்திய வர்த்தக பிரதிநிதிகள் குழு, இந்தியா — ருமேனியா வர்த்தக கூட்டத்தில் பங்கேற்றது.

இருநாடுகளுக்கு இடையே இருதரப்பு முதலீடு மற்றும் தொழில்துறை ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

அப்போது பேசிய அமைச்சர் திரு ஜிதின் பிரசாதா, இந்தியாவின் உற்பத்தி மற்றும் புதுமை கண்டுபிடிப்புகள் துறையில் பங்கேற்குமாறு ருமேனிய தொழில்துறையினருக்கு அழைப்பு விடுத்தார்.

இந்தியாவில் வணிக வாய்ப்புகள் என்ற தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில், அண்மைகாலத்தில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள், வணிகம் புரிவதை எளிதாக்குவதற்கான நடவடிக்கைகள், முக்கிய தொழில்துறைகளில் மாநில அளவிலான ஊக்குவிப்புகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

அப்போது இந்தியா — ருமேனியா நிறுவனங்களுக்கு இடையே கூட்டு முயற்சிகள் மற்றும் தொழில்நுட்ப கூட்டாண்மைகளை ஆராய்வது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

<<<<<>>>>>

அமெரிக்காவின் நியூஜெர்சி, வர்ஜீனியா, நியூயார்க் நகரங்களில் நடைபெற்ற தேர்தலில், ஜனநாயக கட்சிக்கு கிடைத்த வெற்றி குடியரசு

கட்சிக்கான எச்சரிக்கை என்று அந்நாட்டு தொழில் முனைவோரும், அரசியல்வாதியுமான திரு விவேக் ராமசாமி கூறியுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில பதிவிட்டுள்ள அவர், இத்தேர்தலில் அடைந்த தோல்வியின்மூலம், ஆளும் குடியரசு கட்சி பொருளாதார விவகாரங்களில் கவனம் செலுத்த வேண்டும் என்றும், அடையாள அரசியலை கைவிட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

மின்சாரம், மளிகை பொருட்கள், மருத்துவம், சுகாதாரம் மற்றும் வீட்டுவசதி மீதான வரிகளை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திரு விவேக் ராமசாமி கூறியுள்ளார்.

<<<<<>>>>>

அமெரிக்காவில் நடைபெற்ற வர்ஜீனியா மாகாண ஆளுநர் தேர்தலில் இந்திய வம்சாவளியை சேர்ந்த திருமதி **Ghazala Hashmi** வெற்றிபெற்றுள்ளார்.

**61** வயதான ஜனநாயக கட்சியை சேர்ந்த அவர், குடியரசு கட்சி வேட்பாளர் திரு ஜான் **Reid-**ஐ தோற்கடித்துள்ளார்.

<<<<<>>>>>

அமெரிக்காவின் **Louisville** சர்வதேச விமான நிலையத்தில் நிகழ்ந்த விமான விபத்தில் **7** பேர் உயிரிழந்தனர், **11** பேர் காயமடைந்தனர்.

சரக்கு விமானம் ஓடுபாதையிலிருந்து விலகி சென்று தீப்பிடித்ததில் இந்த விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் இரண்டு பேர் பலத்த காயமடைந்ததாகவும், எட்டு பேருக்கு லேசான காயம் ஏற்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<<>>>>>

மத்தியப்பிரதேச மாநிலம் கோணி கிராம் அருகே ஜபல்பூர் — அமர்கன்ட் சாலையில் நேரிட்ட விபத்தில் நான்கு பேர் உயிரிழந்தனர்.

இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த அவர்கள் மீது, லாரி மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<<>>>>>

சீன தைபே-யில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Kaliyanda Poonacha** — தாய்லாந்தின் **Pruchya Isaro** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை, **4-6, 7-6, 7-6** என்ற செட் கணக்கில், தென்கொரியாவின் **Ji Sung Nam —** ஜப்பானின் **Takeru Yuzuki** இணையை வென்றது.

---------------

பஹ்ரைனில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மணீஷ் சுரேஷ்குமார் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் அவர், **6-4, 6-2** என்ற செட் கணக்கில், இத்தாலியின் **Lorenzo-**வை வென்றார்.

**<<<<<END>>>>>**